திருப்புதல், கழிவுநீரைத் தடுப்பான்களை ஏற்படுத்தி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்குத் திருப்புதல் போன்ற பணிகள் 25 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல், கூட்டுறவு, சுற்றுச்சூழல் மற்றும் வனம் ஆகிய துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையைப் பொறுத்தவரை, இன்றைக்கு ஒரு பொன்னான நாள் என்று குறிப்பிடுகின்ற அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ், அருமையான அறிவிப்புகளை அறிவித்து, நம்முடைய மாமன்ற உறுப்பினர்கள் இங்கே கேட்ட கோரிக்கைகளுக்கெல்லாம் நிதி ஒதுக்கீடு செய்தமைக்காக அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் சார்பிலே என்னுடைய அன்பான நன்றியை அவருக்குக் காணிக்கையாக்குகிறேன்.

நேற்றையதினம் கேள்விகளின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்கள் சாலை மற்றும் தார்ச் சாலை வசதிகள் வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அதை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நாங்களெல்லாம் எதிர்பார்க்காத அளவிற்கு இன்றைக்கு உடனடியாக விதி 110–ன்கீழ் அறிவிப்பை அறிவித்து, சாலைகள் அமைக்க 200 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, அதில் 57.70 கோடி ரூபாயை இந்த வருடத்திற்கு ஒதுக்கீடு செய்திருப்பதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக, 'கேளுங்கள் கொடுக்கப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்' என்று சொல்வார்கள். அதைப்போல, 'கேட்டதைக் கொடுப்பவனே, கிருஷ்ணா, கிருஷ்ணா' என்று இந்து மதத்தில் சொல்வார்கள். வியர்வை உலர்வதற்குள் கூலியைக் கொடுக்க வேண்டும் என்று இஸ்லாம் மதத்தினர் சொல்வார்கள். கேள்வி கேட்டு 24 மணி நேரத்திலே, இங்கே உடனடியாக நிதிகளையும் வாரி வழங்கி

மலைச் சாலைகளையெல்லாம் சீர்படுத்த வேண்டும் என்று உத்தரவிட்டு, அதற்கு ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்து விதி 110–ன்கீழ் அறிவித்ததற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–35

நில அளவை செய்தல் என்ற வகையிலே, எங்கு பார்த்தாலும் சாலைகள் பிரச்சினையால் பல்வேறு இடங்களிலே 'எங்களுக்கு சொந்தம்', 'அவர்களுக்கெல்லாம் NCA சான்றுகள் கொடுங்கள்' என்று கேட்டு வருகிறார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்ததற்கிணங்க, இன்றையதினம் Differential Global Positioning System என்கிற DGPS மூலமாக நில அளவை செய்வதற்காக 50 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, முதற்கட்டமாக 31 கோடி ரூபாய் வழங்குகின்றேன் என்ற மாபெரும் எண்ணத்திலே நில அளவைக்காக 50 கோடி ரூபாயை ஒதுக்கியதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய அன்பான நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வன விரிவாக்க மையங்களிலிருந்து நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, உள்ளூர் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. நவீன தொழில்நுட்பத்தைக் கையாண்டு, சந்தைப்படுத்துவதற்கான வழிமுறைகளை விவசாய பெருமக்களிடம் கொண்டு செல்லும் வகையில் தேவையான அடிப்படையில் நாற்றங்கால் உற்பத்தி செய்ய தமிழ்நாட்டில் உள்ள 8 வன விரிவாக்க மையங்களை நவீனப்படுத்துவதற்காக 2.4 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, நவீன வனப் பணி செய்ய ஒதுக்கீடு செய்ததற்காக என்னுடைய நன்றியை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

களக்காடு–முண்டந்துறை, புலிகள் காப்பகங்கள், வன விலங்குகளைப் பார்ப்பதற்குச் செல்கின்ற நமது சுற்றுலா பயணிகள் உயிரினங்களைப் பார்ப்பதற்காகவும், மலையேற்றம் செய்வதற்கும், வனத்தின் இயற்கை அழகை ரசிப்பதற்கும், அரிய சந்தர்ப்பங்களை வழங்கி வருகிறது. அதற்கு உகந்தாற்போல, களக்காடு–முண்டந்துறை, ஆனைமலை மற்றும் சத்தியமங்கலம் ஆகிய மூன்று புலிகள் காப்பகங்களுக்கு கலைநயமிக்க கருத்துக் கூட்ட அரங்கம் அமைப்பதற்கு நிதியுதவி அளித்து, இங்கு அறிவிப்பு செய்ததற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்] [2019 ஜூலை 5

அதைப்போலவே, இன்றைக்கு வனத் துறையில் I.F.S. அதிகாரிகள் மற்றும் ஏனைய உயர் அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் பணி செய்வதற்கு அடிப்படையாக Foundation Leader ஆக இருப்பதற்கு வனத் துறை கீழ்நிலை பணியாளர்களான வேட்டைத் தடுப்புக் காவலர்கள் வனத்தினை பாதுகாப்பதில் பெரும் பங்கு வகிக்கிறார்கள். இதுவரை அவர்கள் வாங்கி வந்த மாத தொகுப்பூதியம் ரூ.6,750/–. அவர்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லியபோது ரூ.10,000/– ஆக உயர்த்தி இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் போதவில்லை என்ற அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொன்னதற்கிணங்க, அதை கனிவுடன் பரிசீலித்து இன்றைக்கு நம்முடைய வன ஊழியர்களுக்கு ரூ.10,000/– லிருந்து ரூ.12,500/– ஆக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஐந்து அருமையான அறிவிப்புகளுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நம் அத்தனை பேர் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த Reserve forest உள்ளே நுழைவதற்கு, வனத் துறையினர் பெரிய தொல்லை கொடுப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். அதில் சாலை போடுவது என்பது மிகப் பெரிய ஒரு சாதனைதான், அதைச் செய்தது பாராட்டப்பட வேண்டிய ஒன்றுதான். அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. ஆனால் ஒன்று, இப்போது இவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறீர்களே, முதலில் எந்தெந்த மலையில் எந்தெந்தச் சாலைகள் என்று identify செய்துவிட்டீர்களா என்பது தெரிய வேண்டும். ஏனென்றால், அணைக்கட்டு தொகுதியில் உள்ள பீஞ்சமந்தை, ஜார்தான்கொல்லை போன்ற மலைப் பகுதிகளில் 20,000 பேர் இருக்கிறார்கள். சுதந்திரம் பெற்று இதுவரை எந்தவிதமான சாவு, வாழ்விற்குக்கூட மேலே செல்ல முடியாது. ஒரு cycle கூட போக முடியாது. அந்தச் சாலை, போட வேண்டிய நிலைமையில் இருக்கிறது. எனவே, இந்த நல்ல திட்டத்தில் இதையும் சேர்த்துக் கொடுத்தீர்களென்று சொன்னால், I'll be grateful and thankful to the Hon'ble Chief Minister.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–40

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 31–5–2019 வரை பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களுக்கு ரூ.595.46 கோடி மதிப்பீட்டில் 6,216 புதிய கட்டடங்களைக் கட்டிக் கொடுத்து கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது. இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரூ.115.39 கோடி மதிப்பீட்டில் 1,005 கட்டடங்களைப் புதிதாகக் கட்டிக் கொடுப்பதற்கும், 582 புதிய அம்மா சிறு கூட்டுறவுச் சிறப்பங்காடிகள் அமைப்பதற்கும் வழிவகை செய்து, விதி 110–ன்கீழ் வெளியிட்டுள்ள அமைதியின் உருவாய், ஆற்றலின் பிறப்பிடமாய்த் திகழும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் ஈ.பி.எஸ். அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களின் கனவுகளை நினைவாக்க துணை நின்று அயராது உழைக்கும் மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ் அவர்களுக்கும் கூட்டுறவுத் துறையின் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றியை கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அம்மா அவர்களுடைய ஆட்சியை, அம்மாவின் வழியில் சீரோடும் சிறப்போடும் வழி நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்தியத் திருநாடே திரும்பிப் பார்க்கின்ற அளவிற்கு குடிமராமத்துத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து, கிராமப் பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான பரப்பளவில் இருக்கின்ற ஏரிகளில் வண்டல் மண் எடுக்கப்பட்டு, விவசாயிகள் சிறப்பாக அதைப் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதை நான் ஒரு விவசாயி என்கின்ற முறையில் சொல்கிறேன். இன்றைக்கு மேட்டூர், பவானிசாகர் போன்ற அணைகளிலிருந்தெல்லாம் வண்டல் மண் எடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த மண்ணை

எல்லாம் போடுகின்றபோது, 4 ஆண்டு காலத்திற்கு செயற்கை உரம் போட வேண்டியதில்லை என்ற அளவிற்கு விவசாயம் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இதனால் விவசாயப் பெருங்குடி மக்கள் இன்றைக்கு மிகுந்த சந்தோஷத்தில் இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இன்றைக்கு மாநகராட்சிப் பகுதிகளிலுள்ள குளங்கள் அனைத்திலும் வண்டல் மண் எடுத்து பயன்படுத்துவதற்கு விவசாயப் பகுதிகள் இல்லை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களிலுள்ள பல குளங்கள் மற்றும் சேத்துப்பட்டு, அம்பத்தூர், கொரட்டூர், மாதவரம், ரெட்டேரிபோன்ற ஏரிகளில் உள்ள நூற்றுக்கணக்கான ஆக்கிரமிப்புகளை எல்லாம் அகற்றி, ஏரிகளை பலப்படுத்தி, ஏரிகளில் மழைக்காலங்களில் மண் சரிவு ஏற்படாவண்ணம் அந்த ஏரிகளுக்கெல்லாம் சுற்றுச்சூழல் துறையின் மூலமாக concrete தளம் அமைத்துள்ளது. அதன் மேல் பகுதிகள், சிறப்பாக நடைபயிற்சி செய்வதற்காக paver block போடப்பட்டு, அப்பகுதிகளிலுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு நடைபயிற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். அதேபோல், ஒரு சில குளங்களில் இன்றைக்கு படகு சவாரி செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டு, முழுவதும் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டு, சிறப்பாக பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அதன் அடிப்படையில்தான் இன்றைக்கு சிட்லபாக்கம் ஏரிக்கு நிதியை ஒதுக்கி, சுற்றுச்சூழல் துறை மூலமாக அதனைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மக்களுடைய நலன் கருதி மாண்புமிகு அண்ணன் முதல்வர் அவர்கள் இத்திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அவருக்கு சுற்றுச்சூழல் துறை மூலமாகக் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்தில் எந்த நாட்டிலும் இல்லாத அளவில், இந்தியத் திருநாட்டின் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில், அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தில் விலையில்லா அரிசியைக் கொடுத்து பசியில்லா தமிழகத்தை உருவாக்கிய தலைவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அம்மா அவர்கள்

வழியில் இவ்வரசு தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட 12 மாவட்டங்களில் மக்கள் கஜா புயலால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்ற வட மாவட்ட மக்களெல்லாம், மழை இல்லாததால் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் பொங்கல் திருநாளை சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்பதற்காக சர்க்கரை, அரிசி உள்ளிட்ட பொங்கல் தொகுப்போடு, 1,000 ரூபாயைக் கொடுத்து அகமகிழ்ந்தவர், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள். அந்த வரிசையில்தான், இன்றைக்கு விதி 110–ன்கீழ் உணவுத் துறைக்கு ரூ.164,24,55,000/– மதிப்பிலான பல்வேறு உன்னதமான அறிவிப்புகளை அறிவித்திருக்கின்ற அருமைக்குரிய அண்ணன், புயலையும் வென்று காட்டிய எங்கள் புன்னகைப் போராளி, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அருமைக்குரிய அண்ணன் அவர்களுக்கு என்னுடைய சார்பிலும், உணவுத் துறையின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

பிற்பகல் 12–45

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019–2020 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். (குறுக்கீடு)

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதில் வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதில் வேண்டாமென்று நீங்கள் சொல்லலாம். ஆனால், ஒரு சபையை நடத்துகின்ற சபாநாயகர், அந்தமாதிரி சொல்லமுடியாது. உறுப்பினர் ஒருவர் ஒரு கேள்வி கேட்டால் அரசின் சார்பில் அதற்குண்டான விளக்கத்தைத் தரவேண்டும். அதுதான் முறை. நீங்கள் திடீரென்று எழுந்து கேட்கிறீர்கள். Zero hour–ல் raise பண்ணவேண்டும் என்று கேட்கிறீர்கள். நீங்கள் நாளைக்கு கேள்வியைக் கேளுங்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுச் சொல்கிறேன். அதுதான் முறை, நீங்கள் இப்படிப் பேசுவது சரியில்லை.